பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 14 ஞாயிற்றுக்கிழமை (28-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 63

# திருநெல்வேலியில் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல்!

## இராணுவ வாகனம் சேதம்; ஒரு சிப்பாய் பலி

சாவகச்சேரி, ஜனவரி 28

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் வைத்து நேற்றுப் பிற்பகல் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். அப்பொழுது இராணுவம் பயணம் செய்த வாகனம் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கித் தேசமானது. சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் படுகாயம் அடைந்தார். இந்தத் தாக்குதலை பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் ஊர்ஜிதம் செய்தது.

படுகாயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ தளத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் பகுதியில் விடுதலைப் புலிகள் இவ்வாரம் நடத்திய நான்காவது தாக்குதல் இதுவாகும்.

கடந்த திங்கட்கிழமை கொக்குவில் கிழக்கிலும், வியாழக்கிழமை இணுவிலிலும், கோண்டாவிலிலும், புலிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

அதற்கு முன்னர் கந்தரோடையிலும் சுன்னாகத்திலும் புலிகள் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே.

வலிகாமத்தை இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் திருநெல்வேலியில்தான் முதலா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 2 தமிழர்கள் சுட்டுக் கொலை

சாவகச்சேரி, ஜன 28

மட்டக்களப்பு மாவட்டம் கும்புறுமூலையில் கடந்த புதன்கிழமை இரு தமிழர்கள் ஸ்ரீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கும்புறுமூலை இராணுவ முகாமில் இருந்து வந்த படையினர் வேம்பூர் என்ற இடத்தில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஏறாவூரில் சுற்றிவளைப்பு

சாவகச்சேரி, ஜன 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் கரையோரப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல்களை நடத்தியுள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஊர்காவற்றுறையிலும் ஈ.பி.டி.பி. மீது தாக்குதல்

### இம்மாதம் மூன்றாவது சம்பவம்

சாவகச்சேரி, ஜன. 28

இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளான ஊர்காவற்றுறையில் உள்ள ஈ. பி. டிபியின் காவலரண் ஒன்றை விடுதலைப் புலிகள் நேற்று தாக்கி அழித்தனர்.

இத்தாக்குதலில் ஈ. பி. டி. பி.யைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

தீவுப் பகுதியில் கடந்த மூன்று தினங்களில் ஈ. பி. டி. பி. யின் நிலைகள் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இது வாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க))

## மட்டக்களப்பு குண்டு வெடிப்புக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை

### கரிகாலன் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜன. 28

''மட்டக்களப்பில் பொது மக்கள் கூடும் இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பு அல்ல''.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் மட்டக்களப்பில் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

வந்தாறு மூலையில் உள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு அருகே கடந்த செவ்வாய் மாலை மாட்டு வண்டியில் குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கும் எமக்கும் தொடர்பில்லை எனவும் கரிகாலன் கூறினார்.

கடந்த பல வருடங்களாகப் போர்ச் சூழலை சமாளித்த வரலாறு எமக்கு உண்டு. இந்திய இராணுவம் வந்தபோது நாம் தலையெடுக்க முடியாது என்றே பலரும் கருதினர். தலைவரின் மனோ வலிமையினாலும் வழி நடத்தலினாலுமே வெற்றி கண்டோம் என்றும் அவர் சொன்னார். (இ-7)

## வலிகாமத்தில் படையினர் பாதுகாப்பு கேள்விக்குறி

கொழும்பு, ஜன. 28

வலிகாமத்தை இராணுவம் முற்றாக ஆக்கிரமித்த பின்னர் அங்குள்ள ராணுவத்தினரின் பாதுகாப்பு ஆக்கிரமிப்புக்கு முன்னர் இருந்ததை விட கேள்விக்குறியாகிவிட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வலிகாமத்தை ஆக்கிரமிக்க முன்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

பலாலித் தளத்தைச் சூழ முன்னணி காவலரண்களிலிருந்த இராணுவத்தினர் புலிகளின் நடமாட்டத்தை இலகுவாக அவதானிக்க கூடியதாக இருந்தது. இதனால் உட்புறத்தில் இராணுவத்தினர் மிகவும் சுதந்திரமாக நடமாட முடிந்தது.

வலிகாமத்தை இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் இராணுவம் அடிக்கடி புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி இருந்தது

நாளுக்கு நாள் அதிகரிக்கும் தாக்குதல் சம்பவங்கள் இராணுவத்தில் சாதாரண

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர மூன்று மடங்கு படையினர் தேவை

### சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தற்போது உள்ளதைப் போன்று மூன்று மடங்கு படையினரும், பணமும் தேவைப்படும். அத்துடன் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் நிறுத்தவேண்டியும் வரும்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த பிக்குகளின் ஒன்றியம் நடத்திய மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் செய்வோரை பலவீனப்படுத்த ஆயுதங்களை மட்டுமன்றி அரசியல் தீர்வையும் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். வடபகுதி மக்கள் பிரபாகரனை எதிர்க்கும் சூழ்நிலை உருவாகும்வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-7)

## வலிகாமத்தில் தாக்குதல தினமும் இடம்பெறுகிறது

### அமல் ஜெயசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

வலிகாமத்தில் உள்ள பல பகுதிகளுக்கு இராணுவம் இன்னும் செல்லவில்லை. அப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

பி. பி. ஸிக்கு அமல் ஜெயசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தி பலரை கொன்றுள்ளனர். இராணுவ வாகனங்கள் பல கண்ணி வெடியில் சிக்கிச் சிதறி உள்ளன. இத்தகைய சம்பவங்கள் நாளாந்தம் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6)

## புல்மோட்டையில் குண்டு வெடித்து சிப்பாய் பலி!

கொழும்பு, ஜன. 28

கைக்குண்டு வெடித்ததால் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு சிப்பாய் காயங்களுடன் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

நேற்று புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபன வளவில் காவலில் இருந்த சிப்பாய்களுக்கே [illegible] (இ-6)

## பெண் இராணுவத்தினரும் சண்டையில் ஈடுபடுவர்!

### விரைவில் ஆனையிறவு வருவராம்

கொழும்பு, ஜன. 28

யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிரான சண்டையில் முதல் தடவையாக பெண் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்டையில் பூரண பயிற்சிபெற்ற 700 பெண் இராணுவத்தினர் அடுத்த சில தினங்களில் வடபகுதிக்கு அனுப்பப்படுவர் என்றும்—

அவர்கள் ஆனையிறவில் உள்ள முன்னணி காவல் நிலையங்களில் கடமையில் அமர்த்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த பெண் இராணுவத்தினர் இயந்திரத் துப்பாக்கிகள், தன்னியக்க ரைபிள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் கொண்டவர்கள் என்றும்—

இவர்கள் உயர்ந்த மதில்களைத் தாண்டி, இடையூறுகளைச் சமாளித்து முன்னேறும் ஆற்றல் உடையவர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை பெண் இராணுவம் அலுவலகப் பணிகளிலும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற

திருமதி

## றோசலின் சூசைரத்தினம் (B. Sc.)

அவர்கள் 27 - 1 - 96 சனிக்கிழமை இயற்கை எய்திய மையிட்டு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அஞ்சலி களை அன்னாருக்கு செலுத்துகின்றது

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பா.அ அ.சபை.
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம். (40267)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி றோசலின் யோசேவ் (இராசம்)

ஊறணி, காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி றோசலின் யோசேவ் (இராசம்) 23.01.96 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் யோசேவ்வின் அன்பு மனைவியும், இசபெல்லா (சுவிஸ்), இரட்ணராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவிந்திரனின் மாமியாரும், மிர்னாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வெள்ளவத்தையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:-
திருமதி அ. குருசுமுத்து (இராசா)
மிருசுவில். (40265)

## வல்லிபுரம் இராசா

தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் இராசா 22 - 1 - 96இல் கொழும்பில் காலமானார்.

இவர் மீனாவின் அன்புக் கணவரும், ஆஷாவின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற விவேகானந்தன் இராசமலர் அவர்களின் அன்பு மருமகனும், செல்லையா, சின்னத்துரை, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தில்லைராசா, இராசமணி, கமலா, ஆனந்தி, கண்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-1-96 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் படி வேண்டுகிறோம்.

தகவல்
வ. செல்லையா (சகோதரன்)
''காந்தவாசம்'',
காளிகோவிலடி,
சரசாலை. (40264)

## திருமதி றோசலின் சூசைரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை)

கைதடி, நாவற்குளியை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி றோசலின் சூசைரத்தினம் 27-1-96 இல் காலமானார். இவர் இளைப்பாறிய தபாலதிபர் சூசைரத்தினத்தின் அன்பு மனைவியும், அஜந்தினியின் மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று 28 - 1 - 96 பிற்பகல் 2-00 மணிக்கு தச்சன்தோப்பு, நாவற்குளி சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சூசைரத்தினம் (கணவர்)
தச்சன் தோப்பு சந்தி,
நாவற்குளி,
கைதடி. (40266)

## கந்தையா குணரத்தினம்

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டக்கச்சியில் வசித்தவருமாகிய கந்தையா குணரத்தினம் உசனில் 27. 01. 96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி வினாசித்தம்பி கந்தையாவின் அன்பு மகனும், சிவலோகவதியின் அன்புக் கணவரும், செல்வரத்தினம், நவரத்தினம், அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (லண்டன்), சசிகரன் (நோர்வே), ஜெயகரன், சுபாஸ்கரன் (லண்டன்), சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வடிவாம்பிகை, தயாநிதி, லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துகா, சாருகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.1.96) பிற்பகல் 3 மணிக்கு உசனில் நடைபெறும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
கு. ஜெயகரன் (மகன்)
(40024)

## 3 மாதங்களாக சம்பளம் இல்லை

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களுக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## உடன் சந்திக்கவும்

யாழ். மத்திய கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு. பாலா மாஸ்ரர் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

திரு. க. கணேசன்

C/o திரு. வெ. காந்தி,
(போரூட் நூலகத்தின் அருகில்),
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை. (40104)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை இறுதியாண்டுப் பரீட்சைகள்

1. விஞ்ஞான மாணி (சிறப்பு) 1994 - 3 ஆம் 4 ஆம் வருடம்
2. மூன்றாம் வருட விஞ்ஞானமாணி 1994
3. சிறப்புக் கலைத் தேர்வு - இறுதியாண்டு 1994
4. பொதுக் கலைத் தேர்வு-இறுதியாண்டு 1994
5. இசைக் கலைமணி வாய்ப்பாட்டு/வயலின்/வீணை/மிருதங்கம்
6. நாட்டியக் கலைமணி
7. கல்விப் பட்டப்பின் - டிப்ளோமா முழு நேரம்/பகுதி நேரம்- பகுதி I, பகுதி II
8. வர்த்தகமாணி பகுதி III - 1994
9. வியாபார நிர்வாக மாணி பகுதி III 1994

1996-02-19 ஆம் திகதியன்று ஆரம்பமாகவிருந்த மேற்குறிக்கப்பட்ட பரீட்சைகள் அனைத்தும் 1996-02-26 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்: இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியாவிலும், யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம், கிளிநொச்சியிலும் சமகாலத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளையும், நேர அட்டவணைகளையும் பரீட்சார்த்திகள் 1996-02 - 19 ஆம் திகதி தொடக்கம் வவுனியாவில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இயக்குனர் அலுவலகத்திலும், கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்திலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக உப-அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பரீட்சார்த்திகள் பரீட்சைகளுக்கு மேற்குறிப்பிட்ட மூன்று பரீட்சை நிலையங்களில் எந்தப் பரீட்சை நிலையத்தில் தோற்றவுள்ளார்கள் என்பதை, எழுத்து மூலம் மேற்குறிக்கப்பட்ட அலுவலகங்களில் ஒன்றில் 1996-02-09 ஆம் திகதிக்கு முன்னராகத் தவறாது அறியத் தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர் (இ/3191)

## தேவை

றெட் இன்டியன் சீவ் (Red Indian Chief) மோட்டார் சைக்கிள் அல்லது அதன் உதிரிப்பாகங்கள் உடன் தேவை. தொடர்பு:-

செ. சந்திரசேகரம்,
''சைனீஸ் உணவகம்'',
கண்டி வீதி, சாவகச்சேரி. (40023)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதி, இலக்கம் 153 இல் வசித்த செல்வி புஷ்பா செல்வவினாயகத்தை ஆஸ்திரேலியாவிலிருந்து கொழும்பு வந்துள்ள சகோதரர் சந்திரன் 6-2-96 ஆம் திகதி ஆஸ்திரேலியா திரும்புமுன் சந்திக்க விரும்புகிறார்.

விவரம் தருபவர்:-
திருமதி ப. அமிர்தவல்லி அம்மா,
1 ஆம் கட்டை சந்தியடி,
பிரதான வீதி,
பருத்தித்துறை. (40105)

## பரி. யோவான் கல்லூரி

யாழ்ப்பாணம்

30- 01 - 96 செவ்வாய் அன்று சகல ஆசிரியர்களையும் காலை 10 மணிக்கும், மற்றும் சந்திக்க விரும்புவோரை காலை 11 மணிக்கும் கணக்காளர் இல்லத்தில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்

★ உயர்தர பரீட்சை முடிவு மீளாய்வு விண்ணப்பம் சமர்ப்பித்தவர்கள் உடனடியாகச் சந்திக்கவும்.

கணக்காளர்

கரவெட்டி. (40106)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்

### சீனியப்பா செல்லத்துரை

[கொக்குவில் கிழக்கு]

தோற்றம் 15 - 06 - 1923 மறைவு 30 - 12 - 1995

எமது துயரத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரது நினைவு நாள் நிகழ்வுகள் இன்று [28 - 01 - 1996] ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

குடும்பத்தினர்

மருதங்கேணி வீதி,
புலோலி கிழக்கு,
அன்ரன் கடையடி. (40103)

## மரண அறிவித்தல்

### உமாமகேசன் சின்னத்தங்கம் (சொக்குமாமி)

கைதடியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட உமாமகேசன் சின்னத்தங்கம் 26 - 01 - 96 அன்று கைதடியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரையினதும் நவமணியினதும் மகளும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வல்லிபுரம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற உமாமகேசனின் அன்பு மனைவியும், விவேகானந்தன் (இராசா— பிரான்ஸ்), உமாமகேஸ்வரி (சுசி — பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன்(சந்திரன்), பஞ்சாட்சரம் மற்றும் தனநாயகம், ரி. செல்லத்துரை (கைதடி),கே. நவரத்தினம் (கைதடி), க. யோகநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற வாகீஸ்வரி (கோலாலம்பூர்) மற்றும் டாக்டர் யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், கைதடியைச் சேர்ந்த பரமேஸ்வரி (Midwife), யோகேஸ்வரி, இராசேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரினது அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27 - 01 - 96 அன்று கைதடியில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மயில்வாகனம்
வ. தனநாயகம்
''புலம்''
கைதடி மேற்கு,
கைதடி. (40269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வெற்றி அரசாங்கத்துக்கு பிரச்சினையை தோற்றுவித்து விட்டது

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

யாழ்ப்பாணம் மீதான ராணுவ வெற்றி பல வகைகளிலும் இலங்கையில் பிரச்சினைகளையே தோற்றுவித்துள்ளது. குறிப்பாக ஐந்து லட்சம் மக்களை இந்த வெற்றி அகதிகளாக்கி விட்டது.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதாகக் கூறியே பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ''சூரியப்பிரகாசம்'' ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.

ஆனால் தமிழ் மக்கள் துரதிர்ஷ்டவசமாக இதனை நிராகரித்து விட்டனர்.

ராட்சதக் கூட்டமாகவே சிங்கள ராணுவத்தை அவர்கள் கருதினர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## செயலக, வங்கி ஊழியர் நலன்கருதி மினிபஸ் சேவை

வடமராட்சி, ஜன. 28

சாவகச்சேரியில் இயங்கி வரும் யாழ். செயலக ஊழியர்களுக்கும், இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளின் ஊழியர்களுக்கும் வடமராட்சியிலிருந்து சலுகைக் கட்டணத்தில் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

விடுமுறை தவிர்ந்த நாட்களில் காலையில் நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை, மந்திகை, வரணி, சொடிகாமம், மீசாலை ஊடாக சாவகச்சேரிக்கும் —

பிற்பகலில் சாவகச்சேரியிலிருந்து இதே பாதை ஊடாக நெல்லியடிக்கும் மினிபஸ்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனால் வடமராட்சியிலிருந்து தென்மராட்சிப் பகுதியிலுள்ள யாழ். செயலகம், இலங்கை வங்கிக் கிளைகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர். (இ-173)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

28 — 01 — 1996

இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8.02 — வாழ்வின் கோலங்கள்.
- ★ 8-20 — வரலாறு சொல்லும் பாடம்.
- ★ 8. 30 — செய்திகள்.
- ★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

29 — 01 — 1996

காலை

- ★ 7.00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர்வணக்கம்
- ★ 7-10 — இசைமாலை
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7. 45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்.

## இடம்பெயர்ந்தோருக்கு வடமராட்சியில் உதவி

நலனோன்பு நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கு வடமராட்சிப் பகுதியில் உள்ள பொது நிறுவனங்கள் உணவு வகைகளை வழங்கி வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக இப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள், நாடக மன்றங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், லயன்ஸ், றோட்டறி, இன்ரறக்ட் கழகங்கள் ஆகியன சமைத்த உணவு வகைகளையும் உலர் உணவு வகைகளையும் வழங்கி வருகின்றன.

அத்துடன் உடைகளையும் அவை வழங்கி வருகின்றன. (இ-173)

## சாவகச்சேரி லயன்ஸ் கழக கண் சிகிச்சை முகாம்

சாவகச்சேரி, ஜன. 28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பளைப் பகுதியில் நடத்தும் இரண்டாம் கட்ட கண் சிகிச்சை முகாமும் நீரிழிவு, இரத்த அமுக்கம் ஆகிய பரிசோதனையும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பளையில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர் வாழ்வுக் நிறுவன மண்டபத்தில் நடத்தப்படும்.

கண் சிகிச்சை முகாமில் கலந்து கொள்பவர்கள் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் நிறுவன அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

முதற் கட்ட கண் பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (இ-117)

## மகாத்மா காந்தி விருது

அமைதிக்கும், சமாதானத்துக்கும் பாடுபடும் உலகத் தலைவர்களுக்கு ஆண்டுதோறும் ''மகாத்மா காந்தி நினைவு அமைதி விருது'' எனும் புதிய விருதை வழங்க இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான மகாத்மா காந்தி நினைவு அமைதி விருதை தன்சானியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் யூலியஸ் நிரேரேக்கு இந்திய அரசு வழங்கியுள்ளது. (இ-7)

# 13ஆவது சட்ட திருத்தத்திலிருந்து பின்னோக்கிபோகும் தீர்வு ஆவணம்

## தமிழர் உரிமைகளை பறிக்கவே உதவும்

ஜனாதிபதி சந்திரிகா தமது அரசியல் தீர்வுத் திட்டத்தை வெளியிட்டுள்ளார். கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதை போல, தீர்வுத் யோசனையில் இருந்த ஒருசில நல்ல அம்சங்கள் கூட தீர்வுக்கான சட்ட ஆவணத்தில் மாற்றப்பட்டுள்ளன.

ஆயினும் இதற்குக் கூட ''ஆமாம் சாமி'' போடும் தமிழ் அரசியல் வாதிகளும் இருக்கத்தான்செய்கின்றனர். இந்த அரசியல் புத்தி ஜீவிகளின் புத்திக் கூர்மையை எவ்வாறு வர்ணிப்பது?

அரசமைப்புச் சட்டத்தின் 13 வது திருத்தத்தின் கீழ் நடைமுறையில் உள்ள அம்சங்கள் கூட புதிய தீர்வுத் திட்டத்தின் படி தமிழருக்குப் பாதகமான முறையில் மாற்றப்படவுள்ளன.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராகச் செயற்படும் ஒரு மாகாண சபையைக் கலைப்பதற்கு மட்டுமே இப்போது ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

ஆனால் இப்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட ஆவனத்தின் பிரகாரம் சாதாரண காலத்திலும் பிராந்திய சபையைக் கலைக்க முடியும். அத்துடன் ஆளுநருக்கும் இந்த அதிகாரம் வழங்கப்படும். ஆயுதக் கிளர்ச்சி நடக்கிறது எனக் கற்பனைக் கதையை உலாவ விட்டு இதனைச் சாதிக்க முடியும்.

வடக்கும் கிழக்கும் இப்போது இணைந்து ஓர் ஆளுநரின் கீழ் உள்ளது. புதிய ஆலோசனையின்படிவடக்கையும் கிழக்கையும் வெவ்வேறாகப் பிரிக்கக்கூடிய அபாயம் உண்டு. முஸ்லிம்கள் தனிப் பிராந்தியம் கோருவதால் மூன்றாகவும் பிரிக்கப்படலாம்.

முந்திய தீர்வுயோசனையில் இருந்த பிராந்தியத்தின் காணி உரிமை, ஜனாதிபதிக்குக் கலைக்கும் அதிகாரம் இல்லாமை போன்ற நல்ல அம்சங்கள் இப்போது நீக்கப்பட்டுள்ளன

### நேரடி ஆதிக்கத்துக்கு வழி

துறைமுகங்கள் மத்திய அரசின் கீழ்வரும் என்ற ஆலோசனை, திருகோணமலை, காங்கேசன்துறை, பருத்தித்துறை முதலான தமிழீழத்தில் உள்ள துறைமுகங்களைச் சாட்டாக வைத்து இங்கு நேரடி ஆதிக்கம் செலுத்த வழிவகுக்கும். இதுபோலவே பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்களும் நேரடி ஆதிக்கத்துக்கு வழி செய்யும்.

தமிழ் மக்களுக்கு அவர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு இன்மையை முக்கியமாகக் கருத்தில் கொண்டே விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதுபற்றிஎந்த அம்சமும் தீர்வுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. காவல் துறை பிராந்திய சபைகளுக்குக் கீழ் அமைந்தாலும் குற்றப் புலனாய்வுக்கே பயன்படும். ஆனால் இதன் கடிவாளமும் மத்திய அரசிடமே இருக்கும்.

பிராந்தியங்களில் நீதிமன்றங்கள் இயங்கினாலும் அவற்றின் கடிவாளமும் மத்திய அரசிடமே இருக்குமாதலால் உண்மையான நீதி நிலைநாட்டப்படுமா என்பது சந்தேகமே.

### பின்னோக்கி செல்கிறது

மொத்தத்தில்உற்றுநோக்கும் போது புதிய தீர்வுத்திட்டத்தில் 13ஆவது திருத்தத்திலிருந்து எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இன்னும் பின்னோக்கிச் செல்லவே வழிவகுக்கும்.

ஆனால் சந்திரிகா அம்மையார் திறமைசாலி. தீர்வு யோசனை என்ற கரட்டைக் காட்டி கொழும்பிஉ நிலை கொண்டுள்ள தமிழ்க் குழுக்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு யாழ்ப்பாண நகர் உட்பட வலிகாமத்தை தரைமட்டமாக்கிவிட்டார். தமிழரின் பொருளாதாரத்தின் பெரும் பகுதியை நாசமாக்கி விட்டார். தமிழ் குழுக்களின் உதவியுடன் தாம் செய்வது சரியானது, நியாயமானது என்றும் காட்டிவிட்டார்.

### நிரந்தர எதிர்ப்பல்ல

தீர்வு போசனையில் பெரு நம்பிக்கை வைத்து, தங்கள் அரசியலை நடத்துவதற்குக் கற்பனை செய்த தமிழ்க் குழுக்கள் சில இப்போது சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ஆவணம் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளன.

ஆனால் அது நிரந்தர எதிர்ப்பாக நீடிக்காது; தற்காலிகமானதே. தமிழக்குழுக்கள் தமது அரசியலைத் தொடர்வதற்கும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் சிங்கள அரசுகளையே அண்டி வாழ வேண்டியுள்ளது.

பெரும் புத்திஜீவிகள் என்று தங்களுக்குப் பட்டம் சூட்டிக் கொள்ளும் கூட்டணித் தலைவர்களுக்கு உண்மையில் அரசியல் ''அறளை'' பெயர்ந்து விட்டது.

கிழக்கிலும் வடக்கிலும் தமிழர் பூமியை சிங்களவருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கத் தயாராகின்றனர். பெயரளவில் மட்டும் சுயாட்சியாகவும், சமஷ்டியாகவும் மேனி மினுக்கிக் காட்டும் சந்திரிகாவின் சட்ட ஆவணத்தை ஆதரிக்கா விட்டால் தமிழனுக்கு இனி எதுவுமே கிடைக்காமற் போய் விடும் என்ற தோரணையில் பேசுகிறார்கள்.

இது அவர்களின் அரசியல் பலவீனத்தையும் சுய நம்பிக்கை இல்லாமையையுமே எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் ஆதரவு இல்லாத தமிழ்க் கட்சிகளைக் ''கைக்குள் போட்டுக் கொண்டு'' சந்திரிகா தீர்வாகக் காட்ட முயலும் இந்தச் சட்ட ஆவணம் தமிழர்களின் உரிமைகளையும் அவர்களையும் அழித்துத் தீர்க்கும் திட்டமாகவே உள்ளது. ★

- கு. சி. சுந்தரம்பிள்ளை -

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

உதயனின் சாவகச்சேரி பருத்தித்துறை பணிமனைகள்

காலை 8-00 மணி முதல் இரவு 9-00 மணி வரை திறந்திருக்கும்

9, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி.

பழைய பஸ் நிலையச் சதுக்கம், பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய றொறபன் EY 20 இறைக்கும் இயந்திரம், சிங்கர் மெஷின் மோட்டோர் உடன், நாஷனல் பனோசொனிக் றேடியோ, 20'' Colour T. V. – Sony K. V. 2020 இற்றார், கிறைண்டர் சுமித், நாஷனல் எலெக்ரிக் Toolset. மகேசன், மே/பா இராஜசேகரம் இளைப்பாறிய அதிபர், பாலன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
(40262)

மொறிஸ் மைனர் கார், வில்லியர்ஸ் 12 இந்தியன் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இ. ஜனார்த்தனன், மே/பா க. கதிர்காமர், ''சிவகாமி நிலையம்'', ஐயானர் வீதி, பருத்தித்துறை. (40090)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உள்ளது. விவரம் நேரில் தொடர்பு: சி. கணபதிப்பிள்ளை, மே/பா சி. வல்லிபுரம், நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை.
(40096)

## வியாபாரிகளுக்கு

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு மாடம், யாழ். வீதி, கிளிநொச்சி. [நீதிமன்றம் முன்பாக]. [சி/3176]

## காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள லூர்து மாதா கோவிலுக்கு அருகாமையில் உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40098)

## தோல் கருவிகள்

சகலவிதமான தோல் கருவிகளும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். இந்திரன் மிருதங்க தொழிலகம், 156ஆம் கட்டை, கிளிநொச்சி. (40454)

## தவறிவிட்டது

26 – 1 – 96இல் புத்தூருக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் சீட்டுக்கணக்குகள் எழுதிய கொப்பி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறியத்தரவும். கந்தர் இரத்தினம், சரஸ்வதி வித்தியாலயம் (முகாம்), சரசாலை தெற்கு. (40258)

## தேவை

பெண் அறிவிப்பாளர்கள், குரல் வளம் உள்ளோர் மட்டும் விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும். மணிக்குரல் விளம்பர சேவை, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி. (சி-2951)

## ஆண்டு – 5 புலமைப் பரிசில்

பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன்
எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
வெளியீடு:-
**BOND**
(40263)

# வாழ்த்துகிறோம்

ஓய்வு பெற்றுச் செல்லும்
யாழ். இந்துக்கல்லூரி அதிபர்
**திரு. அ. பஞ்சலிங்கம்**
அவர்களின்
சேவையைப் பாராட்டும் இந் நாளில்
அவர் நீடுழி வாழ வாழ்த்துகிறோம்

பழைய மாணவர் சங்கம்.
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை.
(சி–3190)

# இடமாற்றம்

யாழ். நகரில் நீண்ட ஆண்டு காலம் பிரபல்யமாக இயங்கிவந்த

## 'ஆர். வி. ஜி. மருந்தகம்'

தற்போது வாடிக்கையாளரின் நன்மை கருதி

**இல. 113, யாழ். வீதி, கிளிநொச்சியில்**
[கரடிப்போக்கு சந்திக்கு அருகில்]
இயங்குகிறது.

★ சகலவிதமான ஆங்கில மருந்துகளும்

★ பால் மா வகைகளும்

மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
[40453]

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 02 — 1934



உதிர்வு: 08 — 02 — 1995

## அமரர் கதிரேசு நவரத்தினம்

(இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்)

திதி: 28 — 01 — 1996

ஆண்டொன்று ஆனதப்பா – உங்கள்
அன்பு முகம் காணாமல்
ஆசைமொழி கேளாமல்
ஆறிடுமோ எங்கள் மனம் அப்பா
மீண்டும் வரும் நினைவலையால்
உருகியழும் எம்முள்ளம் – எந்நாளும்
எம் நெஞ்சம் என்னும் கோயிலிலே
உங்கள் நினைவே அப்பா
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

புங்கடி,
வதிரி.
28 – 01 – 96
(40102)

# இறந்த இளைஞனின் மரணத்தில் சந்தேகம்

மந்திகை, ஜன. 28

பளை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் காலை ஒப்படைக்கப்பட்ட ஓர் இளைஞனின் சடலம் மாலை மரண விசாரணைக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

இளைஞனின் மரணத்தில் உறவினருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தினாலேயே காவல் துறையினரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாளில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கைதடி மத்தியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கந்தசாமி (வயது 18) என்ற இளைஞனே மரணமானவராவார்.

இந்த இளைஞன் எழுதுமட்டுவாளில் ஒரு வீட்டில் தங்கியிருந்து தொழில் செய்து வந்தார் என்றும் —

அந்த வீட்டில் படுத்திருந்த வேளை நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி அளவில் பாம்பு தீண்டியதாகவும் —

எனினும் காலை 6 மணிக்கே பளை ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைக்கப்பட்டதாகவும் —

இறந்தவர் தங்கியிருந்த வீட்டுக்காரரால் தெரிவிக்கப்பட்டதாக இறந்தவரின் உறவினரால் கூறப்பட்டது,

சடலம் விசாரணைக்காக மந்திகை ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(இ–15)

## காணவில்லை

கொழும்புத்துறை கிழக்கு, இல – 62, நாலாம் குறுக்குத் தெருவில் வசித்த

திருமதி
சரவணமுத்து
சிவானந்தம்

அவர்களை 30-10-95 முதல் காணவில்லை. வயது 70. இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும், திரு. வே. தர்மலிங்கம், C/o வண. அன்புராஜ், பெந்தேகோஸ்து சபை, சாவகச்சேரி.
(40235)

## சந்திக்கவும்

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களும் **30 - 1 - 1996** புதன்கிழமை மு. ப. 10 மணிக்கு லூர்துமடம், கரவெட்டியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிப்பதுடன் அன்று சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகின்றேன்.

(40020) அதிபர்.





## லாவண்யா பல் மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை நவீன முறையில் பரிசோதித்து உடன் கண்ணாடி பெறவும், பற்களை சிறந்த முறையில் ஒரே நாளில் கட்டிக் கொள்ளவும் வடதமிழீழத்தில் உள்ள ஒரே ஸ்தாபனம் ''லாவண்யா''

உரிமையாளர்:–
டாக்டர் றெஜி சொலமன்

கண்டி வீதி,
சாவகச்சேரி.
(A. G. A. காரியாலயம் முன்பாக)
(சி-3183)

கிளை:–
யாழ். வீதி,
நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகில்)

## பதவி வெற்றிடம்

சாவகச்சேரியில் திறக்கப்பட இருக்கும் நவீன வசதிகள் அடங்கிய ''றெஸ்ரோறன்ற்'' ஒன்றுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள்

1. முகாமையாளர் / மேற்பார்வையாளர்
2. சிட்டைலிகிதர் ( Bill Clerk )
3. வெயிற்றர் ( Waiter )
4. பார் கீப்பர் ( Bar Keeper )
5. சமையலாள் ( உள்நாட்டு வெளிநாட்டுச் சிற்றுண்டிவகைகள் தயாரிக்கத் தெரிந்திருத்தல் அவசியம்)
6. சமையல் உதவியாளர்.

விண்ணப்பங்களை **02 — 02 — 96** க்கு முன்பாக ''சுவையகம்'', பிரதான சாலை, சாவகச்சேரி என்னும் முகவரியில் நேரடியாக கையளிக்கவும்.
(40021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தடை தாண்ட பலமுண்டா?

சிறுபான்மையிருக்கும் சம உரிமைகள் உள்ளன. பெரும்பான்மையினரான சிங்களவர்கள் அவற்றை ஏற்று அங்கீகரிக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் மட்டுமே தீர்வு காணமுடியும். அதனாலேயே இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு பௌத்த பிக்குகள் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினையல்ல; பயங்கரவாதப் பிரச்சினையே என்ற கருத்தையும் அவர் நிராகரித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் பேச்சில், தமது தீர்வுத்திட்டத்தை பௌத்த பிக்குகள் எதிர்ப்பார்களோ என்ற அச்சமும் ஆதங்கமும் தொனித்தது. அதனால் தான் அவர் மேற்கண்ட விடயங்களை பௌத்த குருமாரிடம் அழுத்தியும், எச்சரிக்கும் விதத்திலும் எடுத்துரைத்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, நாட்டின் இறைமையையும், ஒற்றையாட்சியையும் பாதிக்காதவாறு அமைய வேண்டும் என்பதே கூட்டத்தில் கலந்து கொண்ட பௌத்த குருமாரின் அமோக கருத்தாக இருந்தது.

சந்திரிகா இப்போது சமர்ப்பித்துள்ள தீர்வுக்கான சட்ட ஆவணத்திற்கு, சமஷ்டி என்ற நறுமணம் (Perfume) பூசப்பட்டுள்ளதே அன்றி, உறுதியான சமஷ்டி அரசாட்சி முறை சேர்க்கப்படவில்லை. அந்த மணத்தைத் தானும் பௌத்த பிக்குகளால் சகிக்க முடியவில்லை என்பதனையே கொழும்பில் நடைபெற்ற பிக்குகள் கூட்டம் புலப்படுத்தியது.

மல்வத்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் உட்பட மூன்று பௌத்த மத பீடாதிபதிகள் இந்த மாநாட்டை பகிஷ்கரித்தமை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை பௌத்த குருமார்களில் பெரும்பான்மையானோர் ஆதரிக்க மாட்டார்கள் என்பதற்கான சமிக்ஞை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசின் சட்ட ஆவணம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் பத்துச்சதவீதத்தைக்கூடப் பூர்த்தி செய்யவில்லை.

அதிகாரங்களைப் பரவல் செய்வதன் மூலம் தமிழர்களின் தன்னாட்சி உரிமையை வழங்குவதாக முடியாது. மேலும் அவர்களின் தாயகத்தைத் துண்டாடும் விதத்திலேயே பிராந்திய சபைகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்படவுள்ளன. அதிகாரப் பரவலில் கூட, கடிவாளம் மத்திய அரசிடமே இருக்கப் போகிறது.

இத்தகைய ஓர் அரைவேக்காடு தீர்வைக்கூட, பௌத்த குருமார் ஆதரிக்கப் பின் நிற்கிறார்கள். முழுக்க முழுக்க சிங்களவர்களுக்குச் சாதகமான, அவர்களைத் திருப்திப்படுத்தும் தீர்வையே தமிழர் மீது திணிக்க பௌத்த பிக்குமார் விரும்புகிறார்கள்

இது விடயத்தில் தமது தீர்வு ஆவணத்தை ஏந்திக் கொண்டு, பௌத்த குருமார் என்ற தடையை முதலில் தாண்டினால் தான், சந்திரிகா மேற்கொண்டு ஓட முடியும்! அதற்கான பலம் இவரிடம் உண்டா?

அது மிகவும் கஷ்டமான காரியம். இந்தத் தடை தாண்டல் முயற்சியின்போது தமது தந்தையாரைப் போலவே சோகமான முடிவைக் கூட அவர் எதிர்நோக்க நேரிடலாம்.

# கிழக்கில் படையினர் கெடுபிடியால் வாழ்க்கை நடத்த முடியாத நிலை

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் யுவராஜ் அண்மையில் லண்டன் சென்றிருந்த போது பி.பி.ஸியின் தமிழோசைக்கு செவ்வி ஒன்றை வழங்கினார். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி: கிழக்கு மாகாணத்தின் நிலைமை எப்படி உள்ளது?

பதில்: கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படப் போவதாக பொதுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதிகமான படையினர் அங்கு கொண்டு வந்து குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். நான் வருவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தான் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

கரையோரத்திலிருந்து மேற்குப் பகுதியான படுவான் கரை நோக்கி இராணுவ அணிகள் நகர்ந்து கொண்டிருந்தன.

அகோரமான ஷெல் தாக்குதல்களை நடத்திக்கொண்டே படையினர் முன்னேறியதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தார்கள்.

இதனால் பெருமளவு மக்கள் நகரை நோக்கி இடம் பெயர்ந்த வண்ணமிருந்தனர்.

### தெற்கில் கையாண்ட உத்தி கிழக்கிலும்

கேள்வி:- இந்த இராணுவ நடவடிக்கை எந்தளவில் பொதுமக்களை பாதித்துள்ளது?

பதில்:- இந்த இராணுவ நடவடிக்கை நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உதாரணமாக படுவான் கரைப் பகுதியில் தான் பெருமளவிலான விவசாய நிலங்கள் உள்ளன. இந்த விவசாய நில உற்பத்தியில் தான் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அடித்தளமே தங்கியுள்ளது.

இங்கு பெரும்பாலும் 100 சதவீதமானவர்கள் விவசாயத்தையே நம்பியுள்ளார்கள். இவர்களுள் பெரும்பாலானோர் விவசாயக் கூலிகள். இவர்கள் நாளுக்கு நாள் இடத்துக்கு இடம் திரிந்து வேலை செய்பவர்கள்.

இராணுவ ரீதியாகவும் சில கட்டுப்பாடுகள் இங்கு விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சில விளை நிலங்களில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படக்கூடாது என்று இராணுவம் கட்டுப்பாடு விதித்துள்ளது. விவசாய உள்ளீடுகளுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாலும் அங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால் அந்த மக்களுக்கான தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டன.

அன்றாடம் கூலி வேலை செய்து பிழைத்தவர்களுக்கெல்லாம் சாப்பிட வசதியில்லாத நிலை. இவை பொருளாதார ரீதியாக ஏற்பட்ட பாதிப்புக்கள்.

இராணுவ ரீதியான பாதிப்புக்களாக 1985 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட பொலீஸ் அதிரடிப் படையினர் அதிகமாக பொதுமக்களை பெரியளவில் கைது செய்வது, அவர்களை நீண்டகாலம் தடுத்து வைத்திருப்பது போன்றவற்றை குறிப்பிடலாம்.

அதிலும் முக்கியமாக குடும்பத் தலைவர்களை — அதாவது உழைப்பாளிகளை — தேர்ந்தெடுந்து தடுப்பு முகாம்களுக்கு அனுப்பும் அம்சம் அங்கு காணப்பட்டது.

இதனால் அவர்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு எவ்வித வருமானமும் இல்லாமல் போனது. எனவே பெண்கள் கூலி வேலை செய்ய வேண்டிய நிலையும், கிடைத்த உணவையே உண்ண வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் தோன்றிய இந்தப் பிரச்சினை இன்றும் தொடர்கிறது.

ஒரு இளம் சமுதாயமே ஆரோக்கியமற்ற நிலைக்கு தள்ளப்பட்டமையை காணக்கூடியதாக இருக்கிறது

அடுத்து 1990 ஆம் ஆண்டளவில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் நோக்கம் இளைஞர்களைத் தேடி அழிப்பதாகவே இருந்தது. தெற்கில் அவர்கள் முன்னர் கையாண்ட உத்திகளையே கிழக்கிலும் கைக்கொண்டதால் ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்துவிட்டார்கள்.

இதனால் 60 தொடக்கம் 70 சதவீதமான பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.

குடும்பத் தலைவனை இழந்த நிலையில் இந்த விதவைகள் வாழ்க்கையை கொண்டு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் அதிகம். பிள்ளைகளுக்கு உணவளிக்க வழியில்லை. பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப போதிய பணம் இல்லை. இப்படி பல பாதிப்புகள் இருந்தன.

### சூழல் பாதிப்பு

கேள்வி: போரினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைவதாகக் கூறுகிறார்கள். அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: பொதுவாக மட்டக்களப்பு மாவட்டம் வாவிகளையும், குளங்களையும் கொண்ட ஒரு பூகோள அமைப்பாக விளங்குகிறது. இங்கு அதிகளவில் கன்னாக்காடுகள் (கண்டல்காடுகள்) உள்ளன. பாதை ஓரங்களெல்லாம் மரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவை தமது பாதுகாப்புக்கு குந்தகமாக இருப்பதாக இராணுவத்தினர் கருதுகின்றனர்.

இதனால் பாதைகளின் இருபுறமும் அரை மைல் தூரத்துக்கு இந்த மரங்களெல்லாம் அழிக்கப்பட்டன. அத்துடன் கன்னாக்காடுகளும் அழிக்கப்பட்டன.

இவை நேரடியாக இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்று சொல்லலாம்

அடுத்து விவசாய நடவடிக்கைகள் தடைப்பட்டதனால் அதற்கு மாற்றீடான எந்தத் தொழிலை செய்ய முடியுமோ அந்தத் தொழிலை அவர்கள் செய்ய ஆரம்பித்தனர்.

உதாரணமாக கரையோர முருகைக் கற்களை அகழ்ந்தெடுத்து அதிலிருந்து சுண்ணாம்பு தயாரிக்கத் தொடங்கினார்கள். இதனால் கடலரிப்பு அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் சுண்ணாம்பு தயாரிக்க காடுகளும் அழிக்கப்படுகின்றன.

தவிர ஆற்றுவாய், பாதுகாப்பு காரணங்களுக்காக வெட்டப்படுவதால் வாவிகளில் நீர்தேங்கி நிற்பதற்கான வசதி இல்லாமல் நீர் வடிந்து விடுகிறது இதனால் இறால் விளைச்சல், மீன் விளைச்சல் பாதிக்கப்படுகின்றன. எனவே இவற்றை நம்பியுள்ள மீனவக் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன.

இதேவேளை இரவு நேர மீன்பிடித்தடையும அமுலில் இருப்பதால் இந்த மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தக் கெடுபிடிகளால் அடிமட்ட மக்கள் தமது வாழ்க்கையை நடத்த முடியாமல் அவர்களது வாழ்க்கை மட்டம் குறைவடைந்து செல்கிறது இதுவே கடந்த பத்து வருட கால நிலைமையாகும். (இ-7)

## சந்திரிகா சீனா செல்வார்

கொழும்பு, ஜன. 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த வருட முற்பகுதியில் சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தத் தகவலை ஜனாதிபதி சந்திரிகாவே அண்மையில் இலங்கை வந்துள்ள சீனத் தூதுக் குழுவிடம் நேரில் தெரிவித்தார். (இ-7)

## பாம்பு கடித்து 5 வயது சிறுவன் மரணம்

கிளிநொச்சி, ஜன 28

5 வயது சிறுவன் ஒருவர் பாம்பு கடித்து மரணமானார்.

கிளிநொச்சி சாந்திபுரத்தைச் சேர்ந்த கருப்பையா கியூரி என்பவரே மரணமானவர் ஆவார்.

மலம் கழிக்கச் சென்ற சமயம் இவரது கையில் பாம்பு கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-123)

பருத்தித்துறை

## வெதுப்பகங்களில் திடீர் சோதனை

வடமராட்சி, ஜன. 28

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வெதுப்பகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவ் வெதுப்பகங்களில் சுகாதாரம் சரியான முறையில் பேணப்படுகிறதா என்பதனை கண்டறியும் பொருட்டு பருத்தித்துறை பிரதேசச் சபைச் செயலாளரும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுகாதார மேற்பார்வையாளரும் இணைந்து இச்சோதனைகளை நடத்தினர்.

திடீர் சோதனையின் போது சில வெதுப்பகங்களில் பொதுவான சுகாதாரசீர்கேடுகள்சில இருக்கக் காணப்பட்டன.

இதனை மிகவிரைவில் ஒழித்து விடுவதாக வெதுப்பக உரிமையாளர்கள் சோதனைக் குழுவிடம் தெரிவித்தனர். (இ-173)

## வடமராட்சி கிழக்கில் மலேரியா கட்டுப்பாட்டில்

செம்பியன்பற்று, ஜன. 28

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மலேரியா நோய் ஓரளவு கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன்னர் மருதங்கேணி ஆதார வைத்தியசாலையில் தினமும் குறைந்தது 15க்கு மேற்பட்டோர் மலேரியாவின் தாக்கத்திற்கு ஆளாகி சிகிச்சை பெற்றனர்.

ஆனால் தற்போது ஆகக்கூடியது 5 பேரே மலேரியாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய சாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-36)

## அழைப்பு விடுக்கப்படும்போதே எமது கருத்தை வெளியிடுவோம்

### சட்ட ஆவணம் குறித்து ஐ.தே. கட்சி கருத்து

ஐ. தே. கட்சிக்கு அழைப்பு விடுக்கும்போதே அதிகாரப் பகிர்வு குறித்து கருத்து வெளியிடுவோம்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ. தே. கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறல.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் சட்ட ஆவண விடயத்தில் ஐ.தே.க. நாட்டின் தனிப்பெரும் கட்சி என்ற வகையில் அதன் பொறுப்பை உணர்ந்தே செயற்படும்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகக் கருத்தைத் தெரிவிக்குமாறோ அல்லது மாற்றுத் திட்டமொன்றை முன்வைக்குமாறோ ஐ.தே.க. [illegible] உத்தியோக பூர்வமாகக் கோரப்படவில்லை.

உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்படும்போது அரசின் அதிகாரப் பரவலாக்கல் ஆவணம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஐ. தே. க தனது கருத்தை முன்வைக்கும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தடை

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மன்னார் தீவினுள் எரிபொருள்களைக் கொள்கலன்களில் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு எரிபொருள் தேவைப்படும்போது வாகனத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கொண்டு சென்றே தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று படையினர் உத்தரவிட்டுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகரத்தினம் சண்முகநாதன்

உடுவில் கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் சண்முகநாதன் (27-01-96) சனிக்கிழமை காலமானார்.

இவர் சாந்தநாயகியின் அன்புக் கணவரும், சடகோபனின் (கோபன் — மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவன்) அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28-1-96) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. கணநாதன்
(குட்டி மாமா)

மீசாலை விக்னேஸ்வரா
வித்தியாலயம் முன்பாக,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(40272)

## திருமதி தங்கம்மா ஆறுமுகம்

காரைநகர் மொந்திபுலத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா ஆறுமுகம் 26-01-96 வெள்ளிக்கிழமை இரவு சங்கத்தானையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், பலராமன் (ஆசிரியர் யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்), பாலகிருஷ்ணன் (அதிபர், யா/ பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அற்புதமலர், அருள்ராசா, ஈஸ்வரராசா, சற்குணராசா, விநோதராசா (மாணவர்கள், கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-1-96 சனிக்கிழமை அன்று சங்கத்தானையில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. பலராமன்
ஆ. பாலகிருஸ்ணன்
(மகன்மார்)

மே/பா. எஸ். உருத்திரமூர்த்தி,
இராக்கச்சி அம்மன் கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(40026)

## முதலித்தம்பி தவராசா

முதலித்தம்பி தவராசா 22-01 1996 அன்று டென்மார்க்கில் காலமானார்.

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் காலஞ்சென்ற முதலித்தம்பி ஆச்சிமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சிவனேஸ்வரியின் (பேபி - டென்மார்க்) அன்புக் கணவரும், ரகுணா (டென்மார்க்), ரகுராஜ் (டென்மார்க்), ரமித்தா (டென்மார்க்) ஆகியோரின் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், காலஞ்சென்ற பாலசிங்கம் அன்னபாக்கியம், மயில்வாகனம் சிவபாக்கியம், இரட்ணசபாபதி (பிரான்ஸ்), நாகேஸ்வரி, சத்தியசிலன் (பிரான்ஸ்), சற்குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வயிரவப்பிள்ளை மகேஸ்வரி, செல்வரட்ணம், திருஞானசம்பந்தர் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று [28 - 01 - 96] டென்மார்க்கில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வயிரவப்பிள்ளை
(சகலன்)

C/o. வி. குமாரசாமி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(40268)

## சபாரட்ணம் ரட்னேஸ்வரன்

சபாரட்ணம் ரட்னேஸ்வரன் (கணித ஆசிரியர்) காலமாகிவிட்டார்.

இவர் சபாரட்ணம் — மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மகனும், ஜெயந்தியின் அன்புக் கணவரும், கார்த்திகாவின் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தந்தையும், சேவியர் ராசாத்தியின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி (ஆசிரியை), சாந்தி (ஜேர்மனி), சறோஜினிதேவி, சுபத்திராதேவி (ஆசிரியை), ஜெயக்குமார் (டாக்டர் நாவலப்பிட்டி), பிறேம்குமார் (ஜேர்மனி), தேவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராமச்சந்திரன் (இளைப்பாறிய ஆசிரியர்), பாலசுப்பிரமணியம், கனகசிங்கம் (அதிபர்), கந்தசாமி (ஜேர்மனி), சுபாநந்தினி, சத்தியசீலன் (கொழும்பு), சத்தியநாதன் (கனடா), சத்தியஞானம் (ஜேர்மனி), சத்தியநேசன் (நோர்வே), சாந்தி ஆகியோரின் மைத்துனரும், காந்தரூபன், தாரணி, ஐங்கரன், மாதங்கி ஆகியோரின் மாமனாரும், ''ஆரபி'' யின் பெரிய தந்தையும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 26 - 1 – 96 அன்று கற்குழி சாவகச்சேரியில் உள்ள எஸ். கே. இராசரத்தினம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஜெயந்தி
(மனைவி)

(40025)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

# வைத்திய அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தம் செய்ய முடிவு

கொழும்பு, ஜன. 28

எதிர்வரும் 9 ஆம் திகதி வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

டாக்டர்களின் நியமனங்களிலும், இடமாற்றங்களிலும் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் ஆனந்த சமரசேகரா குற்றஞ்சாட்டி உள்ளார்.

அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று டாக்டர்கள் குழு ஒன்றை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியது என்றும் —

டாக்டர்கள் யாழ்ப்பாணம் செல்ல சலுகை கேட்பதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்றும்— டாக்டர் ஆனந்த சமரசேகரா மேலும் தெரிவித்தார். (இ-6)

## யாழ். செல்ல சலுகை கேட்கும் டாக்டர்கள்

கொழும்பு, ஜன. 28

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். போதனா வைத்திய சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசிடம் பல சலுகைகளைக் கோரியுள்ளது

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றச் செல்லும் டாக்டர்களுக்கு கொழும்பில் காணி வழங்கப்படவேண்டும், அவர்களின் பிள்ளைகளுக்கு கொழும்பில் உள்ள பிரசித்தமான பாடசாலைகளில் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பன இந்த சலுகைகளில் சிலவாகும் என்று பி. பி. ஸி.க்கு அமல் ஜெயசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

எனினும் இவர்களின் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாகவும் —

அவசரகாலச் சட்டத்தின் கீழ் டாக்டர்கள் கட்டாயமாகச்சேவையாற்றவேண்டும் என்று அரசு தெரிவித்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாடு அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## நோயாளர் வசதி கருதி குடி தண்ணீர்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வரும் வெளி நோயாளர்கள் பார்வையாளர்கள் வசதி கருதி அங்கு நோயாளர் நலன் புரிச் சங்கம் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தியுள்ளது. (இ-173)

### பெண் இராணுவ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புத்தம் தவிர்ந்த ஏனைய பணிகளிலுமே ஈடுபட்டு வந்தனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது. (இ-7)

### ஏறாவூர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரக் குடியிருப்புகளான ஆறுமுகத்தான் குடியிருப்பு, சவுக்கடி, தளவாய் ஆகிய வற்றில் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றிவளைப்புபுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நண்பகல் வரை தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### வலிகாமத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்கள் மட்டத்தில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### திருநெல்வேலியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது கண்ணிவெடித் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

விடுதலைப் புலிகள் வலிகாமத்தில் அடுத்தடுத்து நடத்தி வரும் தாக்குதல்கள் இப்படியே தொடர்ந்து பெருகலாம் எனவும்—

அப்போது படைகள் நிம்மதியாக நிலைகொண்டிருக்க முடியாத நிலை தோன்றும் எனவும் — இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். (இ-7)

## இப்படியும் நடக்கிறது

வடமராட்சி, ஜன 28

குடாநாட்டில் பாவனையிலிருந்த மிகப் பழைய ''மொடல்'' மோட்டார் சைக்கிள் ஒன்று இங்கிலாந்துக்குச் செல்கிறது

இது பற்றிக் கூறப்படுவதாவது:

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்தவரான ஆங்கிலேயர் ஒருவர் ''ட்ராம்'' இனத்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மிகவும் விரும்பி, அதனை 35 ஆயிரம் ரூபாவுக்கு இங்கு வாங்கி இருந்தார். இங்கு கடமையில் இருந்த போது அதிலேயே ஓடித் திரிந்தார்.

மண்ணெண்ணெய்யில் இயங்கக்கூடியதாக ஆக்கிக் கொள்ளப்பட்ட இம் மோட்டார் சைக்கிள் மீது அவர் அளவிலா மோகம் கொண்டிருந்தார்.

தமது சேவைக் காலம் முடிவுற்றதும் இங்கிருந்து அவர் தாயகம் திரும்பும்போது, அம் மோட்டார் சைக்கிளை பருத்தித்துறையிலிருந்து கப்பலில் திருகோணமலைக்கு எடுத்துச் செல்ல விரும்பினார். ஆனால் அவரின் முயற்சி பலனளிக்கவில்லை. அதனைக் கொண்டு செல்ல முயன்றார். அனுமதி கிடைக்கவில்லை.

ஆனால் அவரோ விடவில்லை. தாயகம் திரும்ப முன்னர், அதனை எடுத்துச் செல்வதற்காக கொழும்பில் வைத்து கூட்டுப்படைத் தலைமையகத்துடன் நீண்டகாலமாகப் போராட்டம் நடத்தினார். கடைசியாக அம்மோட்டார் சைக்கிளை பருத்தித்துறையிலிருந்து கப்பலில் திருகோணமலைக்கு எடுத்துச் செல்வதற்கு அவருக்கு அனுமதி கிடைத்தது.

தற்போது அவர் இங்கு கடமையில் இல்லாவிட்டாலும், அவருடன் தொழில் புரிந்த சக பிரதிநிதி ஒருவர் ஹபரண கப்பலில் அந்த மோட்டார் சைக்கிளை ஏற்றிக் கொண்டு திருகோணமலை பயணமாகி உள்ளார்.

அங்கிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் ''ட்ராம்'' மோட்டார் சைக்கிள் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (இ-173)

### ஊர்காவற்றுறையிலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வியாழக்கிழமை வேலணையில் உள்ள ஈ.பி.டி.பியினரின் முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலிலும் ஈ. பி. டி பி. இயக்கத்தினர் ஒருவர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இதற்கு முன்னர் நெடுந்தீவில் உள்ள ஈ. பி. டி. பி.யினரின் முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டிருந்தது

நேற்று ஊர்காவற்றுறையில் நடைபெற்ற தாக்குதலை அடுத்து படையினர் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர் எனவும் —

அப்போது மூன்று நிலக் கண்ணிவெடிகளை அவர்கள் கைப்பற்றினர் என்றும் — அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பையா கையிலாயம்

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பெரியமாவடி, சாவகச்சேரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சு. கையிலாயம் நேற்று (27-01-1996) காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சுப்பையாவின் அன்பு மனைவியும், பத்மநாதன், சிவபாக்கியநாதன், நவரத்தினம் (U.K.), சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகாமிப்பிள்ளை, இராசமணி, பாக்கியவதி (U.K.), விச்சாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோகரன் (U.K.), அரவிந்தன், வள்ளுவன், மங்களகௌரி, யோகேஸ்வரி, பிரதீபா, பிரபாகரன், பாபு, முரளீதரன் (U.K.), மஞ்சுளா (U.K.), பிரியதர்சினி, தவரூபன், இளங்கோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-1-96) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சு. சண்முகநாதன்

மே/பா. சு. கடம்பநாதன்,
கச்சாய் வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

(40271)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 28-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org